செ.வெ.எண்.442 நாள்.06.09.2017

## <u>பத்திரிக்கை செய்தி</u>

### <u>மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால்கள் வழங்கும் முகாம்</u>

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலத்தின் மூலமாக தனியார் தொண்டு நிறுவனமான Freedom Trust –ன் மூலமாக கால்கள் இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசமாக செயற்கை கால்கள் வழங்கிட அளவு எடுக்கும் முகாம் 07.09.2017 அன்று மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், எண்.1, ஜி.எஸ்.டி. ரோடு மாவட்ட நீதிமன்றம் அருகில், செங்கற்பட்டில் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

செயற்கை கால்கள் தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கு அளவு எடுத்து 15 நாட்களில் மேற்க்கண்ட தொண்டு நிறுவனம் மூலமாக செயற்கை கால்கள் செய்து தரப்படும். எனவே, தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள களப்பணியாளர்கள் மூலம் தங்கள் பகுதிகளில் கால்கள் இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு தெரிவித்து 07.09.2017 அன்று மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திற்கு வந்து பயன்பெறமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

செய்தி வெளியீடு,<br>
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,<br>
காஞ்சிபுரம்.